# டாபிந்து

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர் 42 | இதழ் 02 | 2026 ஜனவரி பதிப்பு


# பெண்களுக்கு எதிரான டிஜிட்டல் வன்முறையை ஒழிப்போம்






பெண்கள் வன்முறைக்கு எதிராக 16 நாட்கள் வேலைத்திட்டம் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 25ஆம் திகதி முதல் 16 நாட்களுக்கு நாடு முழுவதும் நடைபெறுவதோடு, 2025 ஆம் வருடத்துக்கான டிஜிட்டல் வன்முறைய நிறுத்துதல் என்பதே இதன் கருப்பொருளாக அமைந்தது. வர்த்தக வலயங்களில் பணியாற்றும் பெண்களின் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளுக்காக முன்நின்ற டாபிந்து குழுமம் ஊடாக பெண்கள் எதிர்க்கொள்ளும் டிஜிட்டல் வன்முறைக்கு எதிராக 16 நாட்கள் செயற்பாட்டு வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டன. நாட்டில் ஏற்பட்ட காலநிலை சீர்கேடு காரணமாக டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி பீ.டி.கார்டன் ஹோட்டலில் இறுதிநாள் நிகழ்வு நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் பியகம மற்றும் கட்டுநாயக்க பிரதேசங்களில் வர்த்தக வலயங்களில் பணியாற்றும் பெண்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

உணர்ந்திருக்கின்றீர்களா? ஏனையோர் முன்னிலையில் உங்களது பல்வேறு குறைபாடுகள் பற்றி கதைத்து சஞ்சலத்தை ஏற்படுத்தும்போது ஏற்படும் உணர்வுகளை. பெண்கள் நாங்கள் சுய கௌரவத்தை பற்றி சிந்திக்கும் மனித பிரிவினர். உண்மையிலேயே பெண்கள் அன்பு,

2ஆம் பக்கம் பார்க்க...

## உள்ளே!


பக்கம் 03 – தைக்கும் இயந்திரத்தினுள் மறைந்த ஆரோக்கியம்
பக்கம் 04 – டிட்வா புயலுடன் பாதிக்கப்பட்ட தொழிலாளர் வாழ்க்கை
பக்கம் 05-07 – எமது பணி
பக்கம் 08 – உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை
பக்கம் 09 – எமது உரிமை
பக்கம் 10 – சிந்தனை
பக்கம் 11 – கவிதை பக்கம், சமூக பாதுகாப்பு

## வியர்வைத்துளி கூட்டமைப்பு

221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
முகநூல்: dabindu collective sri lanka:


# 2026 பெண்கள் எதிர்ப்பு தாக்குதல்

புது வருட ஆரம்பத்தோடு நாட்டில் ஏற்பட்ட பிரதான குழப்பமான பிரச்சினையாக அறியப்பட்டது புதிய கல்வி சீர்திருத்த செயற்பாடுகளே. நாட்டின் கௌரவ பிரதமர் ஒரு பெண் என்பதாலும் கல்வி அமைச்சர் என்பதாலும் அவரை இலக்கு வைத்து செயற்படுத்தப்படும் அரசியல் வன்முறை எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது.

சமூக மட்டத்தில் பெண்களின் உறுப்புரிமையை பெற்று கொள்வதற்கு பாரியளவில் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அர்ப்பணிப்பு செய்யவேண்டியுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் சமூக ஊடகங்களை பயன்படுத்தி செயற்படுத்தப்படும் மற்றும் வெளிப்படுத்தப்படும் தவறான கருத்துக்களை நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம். பெண் தலைமைத்துவத்தை அழிப்பதற்கு எடுக்கும் இவ்வாறான சம்பவங்கள் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயக நடைமுறைக்கு செய்யும் அகௌரவமே. சர்வதேச அடிப்படை கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றினாலும், இவ்வாறு பெண்களை எதிர்க்கும் கருத்துக்களை பரிமாறுவது ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தங்களை மீறும் நிலையை உருவாக்குகிறது. நாட்டின் பிரதமர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், சகல பெண்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஜனநாயக தேவையாகும். அதனால் அவற்றை வெற்றிக்கொள்ள நாங்கள் தொடர்ச்சியாக முன்நிற்போம். அதற்கான குரல் கொடுத்து போராடுவோம்.

இவ்வாறான வைர, குரூர கருத்துக்களை மென்மேலும் கொண்டுசெல்வதற்காக சிவில் அமைப்புகளை குறிவைத்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்துக்கொள்வது வெட்கக்கேடான விடயமே. டாபிந்து குழுமம் பற்றிய பொய்யான பிரச்சாரங்களை பாராளுமன்ற சிறப்புரிமையை பெற்றுக்கொண்டு ஜனநாயக விரோத முன்வைப்புகள் பற்றி வகைக்கூறுதல் எதிர்க்கட்சியின் செயற்பாடல்ல. இது அடிப்படையில் சிவில் சமூக அமைப்புகளுக்கு கருத்து சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம் என்பற்றுக்கு செய்யும் தடையாகும். 41 வருடங்களாக டாபிந்து குழுமம் சிவில் சமூகத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஜனநாயக கட்டமைப்பில் சமமான அணுகுமுறை மற்றும் நீதிக்காக சமுதாய நோக்குடன் செயற்பட்டுவருகிறது. தவறான பிரச்சாரங்கள் ஊடாக எமது செயற்பாடுகள் கட்டுப்படுத்த முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.


1ஆம் பக்கத் **2025 பெண்களுக்கு எதிரான...**

ஆதரவு, பாதுகாப்பு, கௌரவம் என்பவற்றை எதிர்பார்க்கும் பிரிவினராவர். பெண்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் பல்வேறு முறைகள் உள்ளன. உடல் ரீதியான துன்புறுத்தலுக்குள்ளாதல், உளரீதியான துன்புறுத்தலுக்குள்ளாதல், வாய்மொழி மூலம் துன்புறுத்தலுக்கு உள்ளாதல் ஆகிய பல்வேறு வகையில் பெண்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றார்கள்.

இவ் வேலைத்திட்டம் அமைதியான நடைபயணத்துடன் ஆரம்பமாகியது. இங்கு பியகம சுகாதார வைத்திய அதிகாரி காரியாலத்தின், சுகாதார வைத்திய அதிகாரி, S.S.விதான அவர்களின் கருத்துரைகள் இடம்பெற்றது. வெள்ள நிலைமைக்கு முகங்கொடுத்த பின் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. சுகாதார பரிசோதனை பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. உளவியல் தொடர்பான கருத்துரைகளை உளவள ஆலோசகர் திருமதி கங்கா அவர்கள் வழங்கினார். பாலியல், மகப்பேற்று சுகாதாரம் சமூகத்தினரால் ஏற்படுத்தப்படும் வன்முறைகள் மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு போன்ற தலைப்புகளில் தொழிலாளர்களுக்கு பல்வேறு வினோத விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன. எமது சகோதர வட்ட கலந்துரையாடல், பாலியல் மற்றும் மகப்பேற்று சுகாதார வழிகாட்டல் செயலமர்வுகள் மூலம் தொழிலாளர்கள் பெற்றுக்கொண்ட அறிவு இதற்கு அடிப்படையாகும்.

TGCWU அமைப்பின் இயக்குனர் லலிதா தேத்துவகுமா அவர்கள், ஹேன் கால்லகே அவர்கள், நெலும்மாலி தேவசிங்க அவர்கள் மற்றும் மது ஹெட்டியாராச்சி ஆகியோர் இந்நிகழ்வில் நடத்தப்பட்ட போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்தனர். அத்துடன் AFWA அமைப்பிலிருந்து அபிராமி சிவலோகநாதன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இதன்போது வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.





# தைக்கும் இயந்திரத்தினுள் மறைந்த ஆரோக்கியம்

ஒவ்வொரு ஒக்டோபர் மாதமும் மார்பகப் புற்றுநோய் தொடர்பான அறிவூட்டல் செய்யும் மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனை நினைவூட்டும் முகமாக ரோஸ் நிற உடைகளை அணிவர். ஆனாலும் இலங்கையில் ஆயிரக்கணக்கான ஆடைத்தொழில் செய்யும் பெண்களின் ஆரோக்கியம் தொடர்பாக அறிவூட்டுதல் ஒரு மாதம் மட்டும் செய்யும் வணிக நடவடிக்கை அல்ல. அது நிலைத்திருக்கும் வாய்ப்புக்கள் மற்றும் கௌரவம் தொடர்பான முக்கிய விடயங்கள் ஆகும்.

பெண்கள் இலங்கையின் ஆடைத் தொழிலின் இதயம் ஆவார்கள். அவர்கள் தொழிற்சாலைகளை பலப்படுத்துகிறார்கள். நாட்டுக்கு வெளிநாட்டு வருமானத்தை பெற உதவுகிறார்கள். அவர்களின் குடும்பத்தை காப்பாற்றுகிறார்கள். ஆனால் அவர்களின் சுகாதாரம் மற்றும் அவர்களின் வாழ்க்கைமுறை சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் அவர்களின் நீண்ட குரல் எழுப்பல் மற்றும் தேவைகள் எடுபடாமல் இருப்பது வேதனைக்குரியது. அதிகமான பெண் தொழிலாளர்கள் நீண்டநேர வேலைக்காலம், தேவையான அளவு ஓய்வு கிடைக்காமை, போசணையில்லாத உணவு, மன உளைச்சல் போன்ற நிலைமைகளில் அடையமுடியாத உற்பத்தி இலக்குகளுடன் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஓய்வு, சுய பாதுகாப்பு, வைத்திய பரிசோதனை போன்றவற்றுக்கு போதிய நேரம் கிடைக்காமையினால் மார்பக நோய்கள், மெலிதல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு தம்மைப்பற்றி கவனிக்காமலேயே இருந்துவிடுகிறார்கள். சிலபேர் மாதவிடாய், மார்பக புற்றுநோய் போன்ற பெண் சுகாதார தலைப்புகள் தொடர்பாக பேசுவதற்கு வெட்கம் காரணமாக தயங்குகின்றனர். இந்த அசமந்தபோக்கு வாழ்க்கையை இல்லாமல் ஆக்கிவிடும். மார்பக புற்று நோயிலிருந்து பெண்களை பாதுகாப்பதற்காக நேரத்தோடு இது பற்றி அறிந்து கொள்ளுதல் முக்கியமாகும். எனினும் காலம் மற்றும் பரிசோதனை போன்ற வசதிகள் இல்லாததால் தொழிலாளர்கள் ஆபத்தை எதிர்க்கொள்கிறார்கள்.

அவர்கள் முகங்கொடுக்கும் ஆரம்ப தடைகளுக்கு நோய் அறிகுறிகள் மற்றும் நோய் தடுப்பு தொடர்பான விளக்கமின்மையே காரணமாகும். சுகாதார பரிசோதனைகளுக்கு செல்வதற்கு லீவு இல்லாமை, தொழிற்சாலைகளில் பெண்கள் சுகாதாரம் தொடர்பான கல்வி மற்றும் சுகாதார வேலைத்திட்டங்கள் இல்லாமை, கிடைக்கும் ஒரேயொரு விடுமுறை நாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் காரியாலயத்தில் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. வேலை செய்யும் இடங்களில் தொழில்ரீதியாக சுகாதார பாதுகாப்பு பெறக்கூடிய வசதிகள் ஏற்படுத்தாமை அடிப்படை தடையாக உள்ளது.

சுகாதாரம் வரப்பிரசாதம் அல்ல. அது உரிமை ஆகும். அது காரியாலயத்தில் இருந்தாலும் தையல் இயந்திரத்திற்கு பின் இருந்தாலும் எல்லா பெண்களுக்கும் கிடைக்கக்கூடிய உரிமையாகும். தெளிவுப்படுத்தல் முதல் நடைமுறைப்படுத்துவது வரை பெண் தொழிலாளர் உரிமைகள் மற்றும் பலப்படுத்தலுக்காகவும் முன்னிற்பவர்கள் என்ற வகையில் டாபிந்து குழுமம் கேட்டுக்கொள்வது சுதந்திர வர்த்தக வலயத்தில் மார்பக புற்றுநோய் பரிசோதனை நிலையம் மற்றும் அறிவூட்டும் செயலமர்வுகள், சிகிச்சைகள், சம்பளத்தோடு கூடிய விடுமுறை, பெண்கள் சுகாதாரம் தொடர்பாக திறந்த விவாதம் போன்ற சுகாதார கல்வி வேலைத்திட்டங்கள், வேலைநிலைய விடுதிகளுக்கு செல்ல பொது சுகாதார பரசோதகர்களுக்கு வாய்ப்பளித்தல், பாலியல் மற்றும் மகப்பேற்று சுகாதாரம் உரிமை பற்றி எமது தொடர்ச்சியான வேலைத்திட்டங்களுக்கு மார்பக புற்றுநோய் தெளிவூட்டலை ஒன்றிணைத்து பெண்களிடம் உரையாற்றுதல் என்பவற்றையாகும். பயம் மற்றும் வெட்கம் இன்றி தமது உடம்பை பாதுகாத்துக் கொள்வது பாதுகாப்பானது என அவர்களுக்கு உணர்த்தும் இந்த மாதத்தில் மார்பக புற்றுநோய் அறிவுறுத்தல் பற்றி பேசும்போது நாம் அறியாத ஒன்று உள்ளது என்பன தொடர்பாக தெரிந்து கொள்ளவேண்டும். பெண் ஆடைத் தொழிலாளர்கள் உள்ளடங்களாக சுகாதார கொள்கையை நாம் வேண்டிநிற்கின்றோம். எல்லா பெண்களிலும் சுகாதார முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவோம். பெண்களின் சேவையை மதிப்போம், அவர்கள் குரலைக் கேட்டு அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் எதிர்காலத்தை உருவாக்குவோம்.

யசாரா விதுமினி



# பிரச்சினையற்ற காலங்களில் சுதந்திர வர்த்தக வலய பணியாளர்கள் பாதுகாப்பற்று இருப்பது ஏன்?

இலங்கையில் ஏற்பட்ட டிட்வா சூறாவளி இயற்கை அனர்த்தம் மட்டுமல்ல. அது நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பு எந்தளவுக்கு ஆழமான நிலையிலுள்ளது என்பது தொடர்பாக நினைவூட்டுகிறது. வெள்ளத்தினால் வீதிகள், சேவைநிலையங்கள் நீரினால் மூடப்பட்டபோது பாதிக்கப்பட்டவர்கள் யார்? அனர்த்தத்திற்கு உள்ளானவர்கள் யார்? என்பதை வெளிப்படுத்தியது. கூடுதலான பாதிப்பிற்குள்ளானவர்களில் சுதந்திர வர்த்தக வலய பணியாளர்களும் அடங்குவர். அவர்கள் இலங்கையில் ஏற்றுமதி வர்த்தகத்தின் முக்கியமானவர்களாக இருந்தபோதும் அவசர நிலைமைகளில் அவர்கள் கண்டு கொள்ளப்படாத பணியாளர்களாவர். அவர்களின் நாட்டின் பொருளாதார பங்களிப்பு மற்றும் டிட்வா சூறாவளி அனர்த்தம் ஏற்பட்டபோது அவர்களுக்கு கிடைக்கும் பாதுகாப்பு என்பவற்றுக்கு இடையில் பாரிய இடைவெளி உண்டென்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

கிராமங்களில் இருந்து வருகின்ற பிரதானமான சுதந்திர வர்த்தக வலய பணியாளர்களான யுவதிகள் தற்போதும் பொருளாதார பாதுகாப்பில் ஒதுக்கப்பட்டு வாழ்கின்றார்கள். நீண்டவேலை நேரம், குறைந்த வேதனம், வாழ்க்கைச்செலவு அதிகரித்தல், பாதுகாப்பற்ற வீடுகள், நாளாந்த வாழ்க்கையில் பொதுவானதாக அமைந்துள்ளது. அதிகமான தொழிலாளர்கள் சுதந்திர வர்த்தக வலயத்தின் அயலில் உள்ள சிறிய தங்குமிடங்களை கூலிக்கு எடுப்பதோடு அவை பெரும்பாலும் பள்ளமான மற்றும் வெள்ள அபாயம் ஏற்படும் இடங்களில் அமைந்துள்ளன. டிட்வா சூறாவளியுடன் ஏற்பட்ட தொடர்மழை மற்றும் உயர்வடைந்த வெள்ள நீரினால் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. சொந்த பொருட்கள் சேதமடைந்தன. அடையாள அட்டை, வங்கி ஆவணங்கள் மற்றும் முக்கியமான ஆவணங்கள் அழிந்து போயின. அவர்களின் குடும்பங்கள் தூர இடங்களில் இருப்பதாலும் சேமிப்பு குறைவாவதாலும் அதிகமான தொழிலாளர்கள் உடனடி உதவிகள் இல்லாது பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர்.

வெள்ளம் ஏற்பட்ட வீதிகள் மற்றும் தடை ஏற்பட்ட போக்குவரத்து பிரச்சினைகளால் அதிகமான பணியாளர்களுக்கு தமது வேலைதலங்களுக்கு செல்லமுடியாமல் இருந்தனர். நாளாந்த வேதனம், மேலதிக வேலைநேர கொடுப்பனவு, உற்பத்தி ஊக்குவிப்பு என்பவற்றில் தங்கியுள்ள தொழிலாளர்கள் தொழில் இல்லாமல் பல நாட்களாக இருக்கவேண்டி ஏற்பட்டது. இது இழக்கப்பட்ட சம்பளம், உடனடியாக வழங்கப்படாத கூலி, அதிகரித்த கடன், பாதுகாப்பற்ற உணர்வு நிலையை ஏற்படுத்தியது. தேசிய ஏற்றுமதி வருவாய்க்கு குறிப்பிடத்தக்களவு உதவிசெய்தபோதும் இழப்புகளுக்கு மத்தியில் வர்த்தக உயர்ச்சிக்கு தமது பங்களிப்பை வழங்கவேண்டிய நிலைமை சுதந்திர வர்த்தக வலய பணியாளர்களுக்கு ஏற்பட்டது. அதுபோல வடக்கு பிரதேசத்தில் ஒரு தொழிற்சாலையில் சேவையாற்றும் வெள்ள அபாய மத்திய முகாம்களில் இருந்துக்கொண்டு வேலைக்கு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இவர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளையோ அடிப்படை தேவைகளையோ தொழிற்சாலை நிருவாகம் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. இது மனிதாபிமானமற்ற செயற்பாடாக அமைந்தது.

அதுபோல அதிகமான சுதந்திர வர்த்தக வலய பணியாளர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட சட்டபூர்வமான இடர் உதவிகள் கிடைக்கப்பெறாத நிலைமை ஏற்பட்டது. அவர்களுக்கு நிரந்தர விலாசம் இன்மை, வாடகை வீடுகளில் தங்கியிருத்தல், தற்காலிக பதிவாளர்கள் அல்லது இடம்பெயர்ந்தவர்கள் என காரணம் காட்டப்பட்டு மேற்படி உதவிகள் மறுக்கப்பட்டன.

உதவிகள் வழங்கும் நிறுவனங்கள் தங்குமிடங்களில் வாழ்வோர் பாதிப்புக்கு உட்பட கூடியவர்கள் என்பதை புரிந்துக்கொள்ளவில்லை. இவ்வாறான பிரிவினரை கண்டுக்கொள்ளாமை நீண்டகால கொள்கைகள் தோல்வி அடைந்தமையை காட்டுகிறது. சுதந்திர வர்த்தக வலய பணியாளர்கள் பாதுகாப்புக்கான உரிமையுடைய பிரஜைகளிலிருந்து விலகியிருக்கக்கூடிய சேவையாளர்களாக கவனிக்கப்படுகின்றார்கள். சம்பளத்தினுடனான இடர் விடுமுறை, இடர்காலங்களில் வழங்கப்படும் நிவாரணம் மற்றும் வீட்டு உதவித்தொகை இல்லாத தொழிற்சாலை ஊழியர்களை பாதிக்கும் பிரச்சினைகளுக்கு உதவ ஆயத்தம் இல்லாத நிறுவனங்கள் பதிலளிக்க வேண்டிய நிலையை வெளிப்படுத்தியது.

அதனால் சுதந்திர வரத்தக வலய பணியாளர்களை பாதுகாப்பது தொடர்பாக தற்காலிக உதவிகளை விடவும் ஒன்று தேவைப்படுகின்றன. அது கொள்கை சீர்திருத்தம், சேவை பெறுநர்களின் கண்காணிப்பு மற்றும் பணியாளர்களின் உரிமை உள்ள பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ரஷ்மி வீரக்குட்டி

# வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட எங்கள் தொழிலாள சகோதர சகோதரிகளுக்காக ஒரு பொது சமையலறை





டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்காக 2025 டிசம்பர் 11 ஆம் திகதி டாபிந்து குழுமத்தின் மூலம் பியகம மற்றும் கட்டுநாயக்க பிரதேசத்தில் வசிக்கும் அனைவருக்கும் நிறையுணவு வேளையொன்றை வழங்கும் நோக்கத்தோடு பொது சமையலறை ஒன்று செயற்படுத்தப்பட்டது. அதன்போது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களான, சகோதர சகோதரிகள் 135 பேருக்கு எங்களால் உணவுபொதிகள் பகிர்ந்தளிக்கக்கூடியதாக இருந்தது. அவ்வாறே இப்பிரதேசத்தினுள் உலர் உணவுப்பொருட்கள் அடங்கிய பொதியும் பகிரப்பட்டது. மேலும் பாதிப்புக்குள்ளான கிளிநொச்சி, வவுனியா பிரதேச தொழிற்சாலைகளில் பணிபுரியும் சகோதர சகோதரிகள் 225 பேருக்கு உலர் உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகள் பகிரப்பட்டன.

# ஒதுக்கப்பட்ட சமூகங்களில் பெண்களின் அரசியல் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கான புதிய செயற்பாடுகள்

டாபிந்து குழுமம் தனது நிறுவன பயணத்தின் புதிய கட்டமாக, குறிப்பாக புறக்கணிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்களின் அரசியல் பங்கேற்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி இந்த முயற்சியை தொடங்கியுள்ளது. இத் திட்டம் குறிப்பாக ஆடைத் தொழில் துறை, மீனவர் சமூகங்கள் மற்றும் தோட்டத் துறைகளில் உள்ள பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது. இப்பெண்கள் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்குகின்ற போதிலும், அரசியல் பங்கேற்பிலும், விரிவான சமூகத் தீர்மானமெடுப்பு செயல்முறைகளிலும் முறையாக விலக்கப்படுகின்றனர் என்பதை இம்முயற்சி உணர்கிறது. இப்பெண்களுக்கு அரசியலிலும் மற்றும் பிற சமூக மற்றும் சிவில் ஈடுபாடுகளிலும் பங்கேற்க சம உரிமை உள்ளது என்பதை டாபிந்து குழுமம் உறுதியாக வலியுறுத்துகிறது.

அதன்படி, 2025 செப்டம்பர் மாதத்தில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் முதல் நடவடிக்கையாக, பெண்களின் அரசியல் பங்கேற்பு துறையில் பத்து ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவம் கொண்ட நிபுணர்களால் ஆன ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. முதல் ஆலோசனைக் குழு கூட்டம் 2025 டிசம்பர் 12 ஆம் திகதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்தை டாபிந்து குழுமத்தின் செயற்பாட்டு இயக்குநர் திருமதி சமிலா துஷாரி மற்றும் திட்டக் குழுவினர் நடத்தினர். இந்த ஆலோசனைக் குழுவில் கலாநிதி சேபாலி கோட்டேகொட, திருமதி தரங்கா த சில்வா, திருமதி உதேனி தெவரப்பெரும்மா, திருமதி சுமிகா பெரேரா மற்றும் திருமதி குமுதினி சாமுவேல் ஆகியோர் அடங்குகின்றனர். கூட்டத்தின் போது திட்டத்தின் இலக்குகள், திட்டமிடப்பட்ட செயல்பாடுகள் மற்றும் செயல்படுத்தும் உத்திகள் முன்வைக்கப்பட்டு விரிவாக கலந்துரையாடப்பட்டன. திட்டத்தை மென்மையாக, பயனுள்ளதாக மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படுத்துவதை உறுதிப்படுத்த ஆலோசகர்கள் அளவிட முடியாத அளவிலான புரிதலையும் உத்திசார்ந்த வழிகாட்டுதலையும் வழங்கினர்.

# வவுனியாவில் பிரதேச செயலக அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிப்பட்டறை



டாபிந்து குழுமத்தினால், வவுனியா பிரதேச செயலகத்தில் அரச அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி 8.1.2026 அன்று ஏற்பாடு செய்யப்பட்டு வெற்றிகரமான முறையில் நடாத்தப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்தொழிலாளர்கள் அரச சேவைகளை அணுகுவதில் உள்ள குறைபாடுகளை இனங்கண்டு அதனை நிவர்த்தி செய்வதற்கான யதார்த்தபூர்வமான தீர்வுகளை கண்டறிதலே இந்நிகழ்ச்சிப்பட்டறையின் பிரதான நோக்கமாக அமைந்தது. இந்நிகழ்ச்சி திட்டத்தில் வவுனியா, சிவில் சங்கங்களின் பிரதி ஒருங்கிணைப்பாளர், பிள்ளை பராமரிப்பு உத்தியோகத்தர், முன்பிள்ளை அபிவிருத்தி உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், குழந்தை உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், உளநலத்துணை உத்தியோகத்தர், போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமசேவக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர். இந் நிகழ்ச்சியில் வளவாளராக திருமதி சிறிதேவி கேதீஷ் அவர்கள் பங்கேற்றிருந்தார். பால்நிலை வன்முறைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல், முடிவெடுப்பு செயல்முறைகளில் பெண்களை வலுப்படுத்தல், பெண் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாத்தல் போன்ற தலைப்புகளின் கீழ் விரிவான முறையில் நிகழ்ச்சியில் கலந்துரையாடப்பட்டது. மேலும் டாபிந்து குழுமத்தினால் ஆய்வுசெய்யப்பட்ட கடந்தகால அறிக்கைகள் தொடர்பாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. தற்காலத்தில் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக டாபிந்து குழுமத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த தகவல்கள் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது. மேலும் கலந்துரையாடப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக டாபிந்து குழுமத்தினால் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டு தொடர்ந்து அரச அதிகாரிகளின் நடைமுறை சாத்தியமிக்க பரிந்துரைகளும் பெறப்பட்டன.



# வவுனியாவில் பெண் தொழிலாளர்களுக்கு உளநல ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

டாபிந்து குழுமத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, வவுனியா ஆடைத்தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் பெண் தொழிலாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் உளநல ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சிகள் இரண்டு வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. 14.12.2025 அன்று மருக்கரம்பலாய் கிராமசேவக பிரிவிற்குட்பட்ட பகுதியை சேர்ந்த ஆடைத்தொழிற்சாலையில் வேலைசெய்யும் பெண்கள் ஐந்து பேருக்கு உளநல ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் 21.12.2025 அன்று சிவபுரம் கிராமசேவக பிரிவிற்குட்பட்ட பகுதியை சேர்ந்த ஆடைத்தொழிற்சாலையில் வேலைசெய்யும் பெண்கள் ஐந்து பேருக்கு உளநல ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

உளநல ஆலோசனை அமர்வுகளை திருமதி துஷாந்தன் பிரியதர்ஷனி அவர்கள் நடாத்திவைத்தார். பயனாளர்களிடையே நெருக்கத்தை உருவாக்கும் வகையில் அவர்களுடன் குழு ஆலோசனை அமர்வு நடாத்தப்பட்டு அதன் பின்னர், ஒவ்வொரு பயனாளருக்குமான தனிப்பட்ட ஆலோசனை அமர்வுகள் நடாத்தப்பட்டன. பயனாளர்கள் தங்களின் தனிப்பட்ட பிரச்சினைகளை பகிர்ந்துக்கொண்டு அதற்கான உளநல ஆலோசனைகளை பெற்றனர்.

# டாபிந்து குழுமத்தின் 2025 ஆம் ஆண்டின் பொதுக்கூட்டம் மற்றும் டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் 5 ஆவது பொதுக்கூட்டம்



டாபிந்து குழுமம் தனது பயணத்தின் 41 ஆவது மைல்கல்லை இந்த ஆண்டில் பெருமையுடன் கொண்டாடுகிறது. பெண்கள் அமைப்பாக, ஆடைத் துறையில் பணியாற்றும் பெண் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த காலப்பகுதியில் நாம் செய்த சேவை அளவற்றதாகும்.

41 ஆண்டுகால பெருமையை கொண்ட டாபிந்து குழுமத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டம் 2026 ஜனவரி 04 ஆம் திகதி காலை 10.30 மணிமுதல் கட்டுநாயக்க மத்திய குரண பல்நோக்கு கட்டிடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் எங்கள் உறுப்பினர்களாக, கட்டுநாயக்க, பியகம சுதந்திர வர்த்தக வலயங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 60 உறுப்பினர்களும், கிளிநொச்சி மற்றும் வவுனியா தொழிற்பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தி மேலும் 60 உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அவர்கள் அனைத்து இனங்களையும் மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியது எங்களுக்கு பெரும் பாக்கியமாகும். அதுமட்டுமல்ல, தொழிலாளர் சமூகத்தின் உரிமைகளுக்காக எப்போதும் உழைக்கும் சிவில் சமூக அமைப்புகளான முடிவுப் பொருட்கள் மற்றும் ஆடைத் தொழிலாளர் சங்கம், தோட்டப்புற மக்களின் குரல் அமைப்பு, மக்கள் சகோதரத்துவ அமைப்பு, ஸ்டண்ட் அப் மூவ்மெண்ட் லங்கா, குடிமக்கள் குழு மற்றும் மனித உரிமைகள் மையம் ஆகியவற்றின் பங்கேற்பையும் குறிப்பிட வேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல ஆண்டு முழுவதும் எமக்கான வழிகாட்டலையும் தலைமைத்துவத்தையும் வழங்கிய எமது இயக்குநர் குழுவின் பங்கேற்பையும் நினைவுக்கூற வேண்டியது அவசியம்.

மங்கள விளக்கேற்றி மரபுப்படி பொதுக்கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் மறைந்த டாபிந்து குழுமத்தின் நிறுவுனரான சமன்மலி ஹெட்டியாரச்சி அவர்களை நினைவுகூர்ந்தது ஒரு சிறப்பு தருணமாக அமைந்தது. அதன் பின்னர் டாபிந்து குழுமத்தின் நிறைவேற்று இயக்குநர் திருமதி சமிலா துஷாரி அவர்கள் டாபிந்துவின் வரலாற்றையும் கடந்த ஆண்டின் செயல்பாடுகளையும் முன்வைத்தார். 2024/2025 ஆண்டுகளுக்கான சுருக்கமான செயற்பாட்டு அறிக்கையை திட்ட ஒருங்கிணைப்பாளர் சமர்ப்பித்தார். கணக்கு அறிக்கையை நிதி அதிகாரி சமர்ப்பித்தார். கட்டுநாயக்க, பியகம சுதந்திர வர்த்தக வலயங்களையும், கிளிநொச்சி மற்றும் வவுனியா தொழிற்பகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்திய நான்கு பெண் தொழிலாளர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்துக்கொண்டமை இந்நிகழ்வுக்கு உயிரூட்டியது.

இதனுடன் இணையாக, டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் 5 ஆவது பொதுக்கூட்டம், டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் தலைவரால் ஆரம்பிக்கப்பட்டது. கடந்தகால சபை அறிக்கையும் செயலாளர் அறிக்கையும் செயலாளரால் முன்வைக்கப்பட்டன. கணக்கு அறிக்கை பொருளாளரால் சமர்ப்பிக்கப்பட்டது. இறுதியில் கூட்டு ஒன்றியத்துக்கான புதிய உறுப்பினர்கள் குழு நியமிக்கப்பட்டது.

# வரி நீதிக்கான பிராந்திய ஒத்துழைப்பு: தெற்காசிய வறுமை ஒழிப்பு கூட்டணி கொழும்பில் இணைந்து மாநாடுகளை நடத்தியது



தெற்காசிய வறுமை ஒழிப்பு கூட்டணி, 2025 டிசம்பர் 10, 11 ஆகிய திகதிகளில் இலங்கையில் கொழும்பில், சிவில் சமூக அமைப்புகளின் திறன் மேம்பாடு குறித்து இணைந்த பிராந்திய மாநாட்டையும், நியாயமான வரிவிதிப்பு தொடர்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டையும் வெற்றிகரமாக நடத்தியது. டிட்வா புயலின் பேரழிவு தாக்கத்திற்குப் பின்னர் இலங்கை மீண்டும் எழுச்சி பெற முயற்சிகளை தொடர்ந்துக் கொண்டிருந்த முக்கிய தருணத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பிராந்திய கூட்டாளிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த மாநாடுகளின் முக்கிய நோக்கம், சமத்துவமின்மையை குறைத்து, பொதுச்சேவைகளை வலுப்படுத்தி, பொருளாதார நீதியை முன்னேற்றும் வகையில் நியாயமான, வெளிப்படையான மற்றும் முன்னேற்றகரமான வரி அமைப்புகளை உருவாக்கி பிராந்திய உரையாடல் ஒத்துழைப்பை வளர்த்தெடுப்பதாகும். நேபாளம், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் மாலத்தீவிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்புகள், பெண் குழுக்கள், விவசாயி மற்றும் தொழிலாளர் சங்கங்கள், இளைஞர் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் இதில் பங்கேற்றனர்.

“தெற்காசியாவிற்கு நியாயமான வரிவிதிப்பு ஏன் முக்கியம்?” என்ற தலைப்பில் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வு மாநாட்டின் முக்கிய சிறப்பம்சமாக இருந்தது. சிறப்புப் பேச்சாளர்களில் இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் வழக்கறிஞர், பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் கண்காணிப்பு துறைத்தலைவர் லக்மாலி ஹேமச்சந்திர, பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர் அக்மார் பட்டி, மாலைத்தீவின் வடக்கு ஃபெயிடு தொகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்றக் குழு உறுப்பினரான இஸ்மாயில் நிசார், மற்றும் நேபாளத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் தேசிய திட்டமிடல் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரான டாக்டர் தில்லி ராஜ் கனல் ஆகியோர் இடம்பெற்றனர்.

இலங்கையின் தொழிலாளர் துணை அமைச்சர் மகிந்த ஜயசிங்க அவர்கள் பிரதான விருந்தினராக கலந்து கொண்டு, தொழிலாளர்கள் மற்றும் பொதுநலனுக்கு ஆதரவு வழங்குவதில் நியாயமான வரிவிதிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவர்கள் தங்கள் நாடுகளின் வரி சீர்திருத்தங்கள் மற்றும் பொருளாதார ஆளுமை தொடர்பான அனுபவங்களையும், பிராந்திய பார்வைகளையும் பகிர்ந்துகொண்டனர். அமர்வு ஆர்வமூட்டும் கேள்விபதில் அமர்வுடன் மற்றும் திறந்த விவாதத்துடன் நிறைவடைந்தது.

தெற்காசியா முழுவதும் வரி விதிப்புக்கான நீதியை முன்னேற்றவும், சமத்துவமின்மையை குறைக்கவும் ஒத்துழைப்பை ஆழப்படுத்தவும் வேண்டும் என்ற வலுவான உறுதியுடன் சிவில் சமூக அமைப்புகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நிபுணர்கள் மற்றும் கூட்டாளிகள் மாநாட்டை முடித்தனர்.

# மனித உரிமைகளை பாதுகாக்கும் சமூகமொன்றை உருவாக்குவோம்

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினமானது எல்லா மனிதர்களும் பிறப்பிலிருந்து சுதந்திரமாக வாழ்வதற்கும் சமத்துவத்தை பெறவும் உரிமையுடையன ஆகும் என்பதை மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்துகிறது. மனித உரிமையை பாதுகாப்பதற்கு எடுத்த வரலாற்று வகை கூறலாக 1948 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சர்வதேச மனித உரிமை பிரகடனம் (UDHR) நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது, உலகளாவிய மட்டத்தில் அடிப்படை மனித சுதந்திரம் மற்றும் நியாயத்தை பாதுகாப்பதற்காகவே. எனினும் இன்றும் பெரும்பாலான ஆடை உற்பத்தி துறைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு இந்த உரிமைகள் கிடைப்பதாக தெரியவில்லை. பெண் ஆடைத்தொழிலாளர்கள் இலங்கைக்கு டொலர் பெற்றுத்தந்து இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்த உதவியாக விளங்குகின்றனர். எனினும் அவர்கள் இந்த முக்கியமான செயற்பாடுகளை செய்வது அவர்களது மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே ஆகும்.

நீண்ட வேலைநேரம், குறைந்த சம்பளம், நிலையற்ற தொழில்வாய்ப்பு, சுகயீன லீவுகளின் போதும் கழிக்கப்படுகின்ற வருகை கொடுப்பனவுகள், சமூகத்தின் பாதுகாப்பற்ற நிலைமை, சுகாதாரம் அற்ற தொழில் இடங்கள் என்பன சகல பெண் தொழிலாளர்களும் முகங்கொடுக்கும் பொதுவான பிரச்சினைகள் ஆகும். அதுமட்டுமன்றி அவமானப்படுத்தல், துன்புறுத்தல், பாலியல் வன்கொடுமை, சுதந்திரத்தை கட்டுப்படுத்தல், குறைந்த மதிப்பீடு செய்தல் என்பன பெண்களாக இருப்பதால் இவர்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சினைகள் ஆகும்.

அதுமட்டுமல்ல சுதந்திர வர்த்தக வலயங்களில் வெளி இடங்களில் இருந்து வருகை தந்து தங்குமிடங்களில் தங்கி இருக்கும் பெண்கள் முகங்கொடுக்கும் தங்குமிட வசதிகள் தொடர்பான பிரச்சினைகள், சுகாதார பாதுகாப்பு ரீதியான பிரச்சினைகள், சமூகத்தில் ஏற்படுத்தப்படும் தாழ்மைப்படுத்தல் அத்தோடு பெண்களுக்கு தேவையான பாலியல் மற்றும் மகப்பேற்று சுகாதார உரிமைகள் பற்றிய விபரங்கள் தொடர்பாக சமூகத்தில் அவர்களின் தேவைகள், உரிமைகள் பற்றி வெளிப்படையாக பேசுவதற்கு கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளன.

இச் சர்வதேச மனித உரிமை தினத்தில் நாங்கள் அரசாங்கத்திடம், சேவை வழங்குவோர் மற்றும் சமூகத்திடம் கேட்டுக்கொள்வது தொழிலாளர் உரிமை மற்றும் பெண் உரிமைகளை அடிப்படை மனித உரிமைகளாக ஏற்றுக்கொள்ளும்படியே, தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளில் பெண் தொழிலாளர்களின் குரல்களை கவனத்தில் எடுக்கவும், அவர்களுக்கு மதிப்பளிக்கவும், சாதாரண சம்பளம், பாதுகாப்பான வேலைச்சூழல், சமவாய்ப்பு, சமமாக மதித்தல், கருத்துச் சுதந்திரம், அவர்கள் சரீரத்தை அவர்களே கட்டுப்படுத்திக் கொள்வதற்கும் இடமளிக்கும் படியும் கேட்டுக் கொள்கிறோம்.


இந்த மனித உரிமை தினத்தில் டாபிந்து குழுமத்தினால் பெண்களுக்கு கௌரவம், சமத்துவம் மற்றும் சுதந்திரத்துடன் வாழ்வதற்கும் தொழில் செய்வதற்கும் உரிய சாதாரண சமூகத்தை ஏற்படுத்துவோம் என உறுதி கூறுகிறோம்.

ருவினி சகுந்தலா

# சிந்தனை

வெள்ளம் நம்மை விழுங்க தயாராக இருக்கும் ஒரு ராட்சதனைப் போல. எந்தநாளும் வெள்ளத்தோடு அடித்துச்செல்லப்படுவது எங்களுடைய பொருட்கள் மட்டுமல்ல. எங்கள் எதிர்காலமும் தான். வாழ்க்கையை இறுக்கிப்பிடித்துக்கொள்ள பெரும்பாடுபட வேண்டியுள்ளது. அதற்குமேல் சனியன் விழுந்ததுபோல இன்னும் துன்பங்கள்.... ஒரு மனச்சோர்வில் படுக்கையில் விழுந்தவுடன் சுரங்கியின் துயரக்கதையை தொடங்குகிறாள். இது ஒரு உண்மை கதை. ஒரு பெண்ணின் போர்டிங் அறை முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியது. தற்காலிகமாக வாழ்ந்த அந்த அறை மூழ்கியது, பிரதான சாலைகள் முடங்கின. அவள் சம்பாதித்த அனைத்தும் அடித்து செல்லப்பட்டது. மீண்டும் ஒருமுறை அவளது நம்பிக்கை சிதைந்தது. இந்த கதைகளின் துயரம் ஆட்சியாளர்களுக்கு உணரப்படுவதில்லை. கிளிநொச்சியில் வீடுகளுக்கு கூரை இல்லை என்று ராஜமணி கூறியதை கேட்டேன். மண் வீடுகள் இன்னும் உலரவில்லை என்றும் சொல்கிறார்கள். தலையணை, மெத்தைகள் உலர்த்த நேரமில்லை என்றும் சொல்கிறார்கள். ஆனால் எங்களை வேலைக்கு வரச் சொல்வதோடு மட்டுமல்லாமல், வருகை ஊதியம், வருடாந்த ஊக்கத்தொகை குறைத்தல், கூடுதலாக சம்பளமில்லா ஓவர்டைம் செய்ய திட்டமிடுகிறார்கள். இந்த நாட்டை பாதித்த இந்த பேரழிவுக்கான இழப்பீட்டை நாங்கள் தானா செலுத்த வேண்டும்? கிராம அதிகாரியிடம் தற்காலிக குடியிருப்பாளர்கள் என்று சென்ற சில பெண்களுக்கு எந்த உதவியும் வழங்க முடியாது என்று சொல்லப்பட்டதாம். நாம் தலையணை, மெத்தைகளை உலர்த்தி தவித்துக் கொண்டிருந்தபோது, போர்டிங் ஆன்டி அவற்றை தூக்கி எறிந்து, இழப்புகளுக்கான இழப்பீட்டையும் பெற்றுக் கொண்டாள். எங்களை கவனிக்க யாருமில்லை. சுற்றியுள்ள கோவில், தேவாலயம் இல்லையென்றால் எங்களுக்கு எந்த ஆதரவுமில்லை. எங்கிருந்தாவது ஒரு உணவு, ஒரு குடிநீர் பாட்டில் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டிய நிலை. இந்த வெள்ளம் எங்களின் நம்பிக்கைகள், எதிர்காலத்தை எடுத்துச் செல்கிறது. ஆண்டுகளாக வேலை செய்து நாங்கள் சேர்த்தது 10x12 அறைக்கான அடிப்படை பொருட்களை தான். அதையும் இழந்தால் நாளை பற்றி எவ்வாறு சிந்திப்பது? எங்களைப் பற்றி கவனம் செலுத்தும் திட்டம் ஏன் உருவாகவில்லை? தற்காலிக குடியிருப்பாளர்களாக இருப்பது எங்கள் தவறா? அதற்கான திட்டத்தை உருவாக்க அதிகாரிகளுக்கு பொறுப்பு இல்லையா? நாம் இந்த நாட்டின் குடிமக்கள் என்பது டொலர் கொண்டு வருவதற்காக மட்டும்தானா? எத்தனை பேருக்கு ஒரு அங்குல நிலம் சொந்தமாக உள்ளது? வீடு கட்டுவது எங்கள் கனவாகவே மாறியுள்ளது... புதிய வருடம் பிறந்துள்ளது. எங்கள் கனவுகளுக்கு உயிர் கொடுக்க அதிகாரிகளின் பார்வை திரும்பட்டும்...

சமந்தினி



# சிறிபாத கருணை

ஒரு வருடம் நிறைவடைந்து
புதிய வருடம் வந்தவுடன்
நீல வானத்தில்
வண்ண வானவில்லாய் விரிகிறது
ஒற்றை வரிசையாக
துயரை முடிவுக்கு கொண்டு வந்து
வெப்பத்தை நீக்கி
புண்ணிய சிறகுகள் கொண்ட பட்டாம்பூச்சிகள் போல
இன்றும் கருணை பொழிகின்றனர்
மகா கிரி தம்பத்தை
வணங்கச் செல்லும் சிறிபாதை யாத்திரிகள்.

ரஷ்மி வீரக்குட்டி

# வெளிநாட்டு செய்திகள்

2025 ஆம் ஆண்டின் இறுதியில் மற்றும் 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலகளாவிய வர்த்தகக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், குறிப்பாக அமெரிக்க ஒன்றிய நாடுகள் (USA) இறக்குமதி பொருட்களுக்காக மீண்டும் உயரிய சுங்க வரிகளை விதித்தமை, ஆடைத் தொழில்துறையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலைமை தென் ஆசிய நாடுகளிலும், குறிப்பாக இலங்கையிலும் உள்ள ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்களின் வாழ்க்கையை நேரடியாக பாதிக்கும் நிலையாக மாறியுள்ளது.

25 ஆம் ஆண்டில் அமெரிக்கா ஆடைப் பொருட்களுக்கு உயர்ந்த சுங்க வரிகளை மீண்டும் அறிமுகப்படுத்தியதுடன், உலகளாவிய வர்த்தக பிராண்டுகளும் நிறுவனங்களும் தங்களின் உற்பத்தி வழங்கும் நாடுகளை மறுபரிசீலனை செய்யத் தொடங்கியுள்ளன. இதன் விளைவாக பல ஆர்டர்கள் ரத்து செய்யப்படுதல், உற்பத்தி அளவு குறைதல், விலையை குறைக்க தொழிற்சாலைகளுக்கு அழுத்தம் கொடுக்கப்படுதல் போன்ற நிலைகள் பதிவாகியுள்ளன.

இந்த வகையான முடிவுகளால் அதிகமாக பாதிக்கப்படுவது ஆடைத் துறையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களே. குறிப்பாக வேலை நிலைத்தன்மை குறைதல், வேலை நேரம் அதிகரித்தல் மற்றும் வருமானம் குறைதல் போன்ற பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

இலங்கையின் ஆடை ஏற்றுமதியின் குறிப்பிடத்தக்க பகுதி அமெரிக்க சந்தையை நோக்கி செல்கிறது. ஆகவே, அமெரிக்க சுங்க வரிகள் உயர்வடைந்ததன் காரணமாக இலங்கை தயாரிப்புகள் போட்டித் திறனை இழக்கும் அபாயத்தில் உள்ளன. இந்தத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்கள், ஏற்றுமதி வருமானம் குறைவதற்கும், தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பு ஆபத்துகள் அதிகரிப்பதற்கும், ஆர்டர்கள் பிற நாடுகளுக்கு மாற்றப்படுவதற்கும் வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்த நிலைமை இலங்கையின் ஆடைத் தொழிலாளர்களின் வேலை பாதுகாப்பு, சம்பளம் மற்றும் தொழிலாளர் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை மேலும் தீவிரப்படுத்துகிறது. பல தொழிலாளர்கள் தங்களின் குடும்பங்களின் முக்கிய வருமான ஆதாரமாக இருப்பதால், உலக வர்த்தகக் கொள்கை மாற்றங்களால் வேலை இழப்பு அபாயம், வேலை நேரம் கூடுதல், வருமானம் குறைதல், எதிர்கால வேலை வாய்ப்புகள் குறைதல் போன்றவை அவர்களின் வாழ்வாதார பாதுகாப்பை நேரடியாக பாதிக்கின்றன.

இந்த உலகளாவிய சூழ்நிலை, உலகளாவிய அளவில் எடுக்கப்படும் வர்த்தக மற்றும் பொருளாதார முடிவுகள் ஆடைத் தொழிலாளர்களின் தினசரி வாழ்க்கையை எவ்வாறு தீவிரமாக பாதிக்கின்றன என்பதை தெளிவாக காட்டுகிறது. ஆகவே, தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும், நியாயமான சம்பளம் மற்றும் பாதுகாப்பான வேலை வாய்ப்புகளை உறுதிப்படுத்துவதற்கும், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் வலுவான நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

**"Tracking the impact of US tariffs on apparel & footwear supply chains" – Business & Human Rights Resource Centre**

# நஷ்டஈட்டு சூத்திரம்

## தொழில் வழங்குனர்களுக்கு தமக்கு தேவையானபோது தொழிலாளர்களை விலக்க முடியுமா?

**நாட்டில் உள்ள சட்டங்களின்படி,**

1. தொழில் ஆணையாளரின் எழுத்துமூல அனுமதி இன்றி
2. அல்லது தொழிலாளியின் எழுத்துமூல முன்வைத்தல் இன்றி
3. அ. 15 பேருக்கு அதிகமாக சேவையாளர்களை கொண்டுள்ள

   ஆ.ஒரு வருடத்துக்கு மேல் சேவைக்காலத்தைக் கொண்ட சேவையாளரின் சேவையை தொழில் வழங்குனரால் நிறுத்தமுடியாது.

தொழில் திணைக்களம் தற்போதைய தொழில் செய்வோரை நீக்கி புதிய தொழிலாளர்களை சேர்த்து மீள ஆரம்பிக்க அனுமதிக்காது.

**நஷ்டஈட்டு சூத்திரப்படி தொழில் வழங்குனரால் செழுத்த வேண்டியவை**

முதல் 5 வருடங்களுக்கு 2 X மாதங்களுக்கான சம்பளம்

அடுத்த 9 மாதங்களுக்கு (சேவைக்காலம்) இரண்டு மாதங்களுக்கான சம்பளம்

அடுத்த 5 வருடங்களுக்கு 1 X கூலிக்கான சம்பளம்

மீதி 10 வருடங்களுக்கு (சேவைக்காலம்) மாதத்துக்கான சம்பளம்

சேவையாளர் 34 வருடங்கள் சேவையாற்றி இருப்பின் நஷ்ட ஈடாக 48 மாதங்களுக்கு சம்பளம் செலுத்தவேண்டும்.

தொழில் வழங்குனருக்கு மீள தொழிலை ஆரம்பிக்க வேண்டுமானால் அவர் முன்னர் இருந்த பழைய சேவையாளர்களை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

தொழில் வழங்குனர் எமது உறுப்பினர்களின் சேவையை முடிப்பதாக அறிவிப்பு கொடுத்திருந்தால் அவருக்கு தேவை எமது சேவையாளர்களிடையே பயத்தை ஏற்படுத்துவதற்கு மட்டுமே. அடிப்படை இல்லாத பேச்சுகளுக்கு கவனம் செலுத்த வேண்டாம். சேவையாளர்கள் மேலும் ஏமாற்ற முடியாது என்பதால் அவர்கள் கவலையடைந்திருக்கிறார்கள்.

உதவி எடுத்துக்காட்டு

# டிட்வா புயல் சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட வட மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தொழிலாளர்களுக்காக உலர் உணவுப்பொதிகள் பகிர்ந்தளிப்பு









இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஜ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.